# PART I - TAMIL

## COURSE OUTCOMES (CO)

## (பாடத்திட்ட விளைவுகளும் பயன்களும்)

| | | |
|---|---|---|
| K1 to K5 | CO1 | செய்யுள் (இக்கால இலக்கியம்)<br>1. இக்கால இலக்கியங்களின் தோற்றுவாயை அறிந்துகொண்டு தாமும் படைக்க முயலுதல். சமூக மாற்றங்களுக்கு ஏற்ப இலக்கிய வளர்ச்சியில் மாற்றம் ஏற்படுதலைப் புரிந்து கொள்ளுதல். வாழும் கவிஞர்களை அறிந்து கொள்ளுதல்.<br>2. பக்தியிலக்கிய நூல்கள் தமிழ்மொழிக்கு அளித்த பங்களிப்பினை அறிதல். பக்தியிலக்கியப் பாடுபொருள், சிற்றிலக்கிய வகைமை குறித்த அறிமுகம் செய்தல்.<br>3. காப்பிய இலக்கியத்தின் தோற்றுவா– அறிதல். காப்பிய இலக்கியத்தின் வழி சமூக வாழ்வியலையும், சிறந்த அறநெறிகளையும் கற்றுத் தெளிதல்.<br>4. பத்துப்பாட்டு எட்டுத்தொகை நூல்கள் குறித்த அறிவைப் பெறுதல். தமிழர் வாழ்வியலை நிலத்திணைப்பகுப்பு அடிப்படையில் புரிதல். அகப்பாடல் புறப்பாடலுக்கான களங்களை உணர்ந்து கொள்ளுதல். |
| | CO2 | வாழ்வியல் கல்வி (VBE)<br>1. சுற்றுச்சூழல் விழிப்புணர்வடைதல், சமகால வாழ்வியல் சிக்கலை எதிர்கொள்வதற்கான வழிமுறைகள் அறிதல்.<br>2. கொங்குச் சான்றோர்களின் வரலாற்றினை அறிமுகப்படுத்துதல். இந்திய விடுதலைப் போராட்டத்திற்குக் கொங்குநாட்டுப் பெரியோர்களின் பங்களிப்பினை உணர்த்தல்.<br>3. மொழி வேறுபாடு அகற்றி ஓர் உலகம் எனும் மனப்பான்மையை வளர்த்தல். மொழிபெயர்ப்பாளருக்குரிய இயல்புகளை அறிந்து எதிர்கொண்டு மொழிபெயர்ப்புச் சிக்கல்களைக் கையாளப் பயிலுதல்.<br>4. குடிமைப்பணிக்கான அடிப்படைப் பயிற்சி கிடைக்குமிடங்களை அறிதல். கணிப்பொறியறிவினைத் தமிழ்மொழியறிவுடன் இணைக்கும் முயற்சியை அறிமுகப்படுத்தல். |
| | CO3 | இலக்கணமும் மொழித்திறனும்<br>1. கவிதைத் தொடர்களில் இலக்கணக் குறிப்பு கண்டறிதல். தொடர்களில் வல்லினம் மிகுமிடம்/மிகா இடம் பயன்படுத்தும் முறையை அறிதல். அலுவலக நிலை/பொதுநிலை கடிதங்களைத் தமிழாக்கம் செய்வதற்கான கலைச் சொல் அறிதல்.<br>2. தொகை, தொகா நிலைத் தொடர்களுக்கான வரையறைகளைப் புரிந்துகொள்ளுதல். ஆகுபெயர் வகைகளைஅறிதல். விண்ணப்பம் (அலுவலகம், பொது) எழுதுவதற்கான கட்டமைப்பினை அறிதல்.<br>3. யாப்பிலக்கணத்தின் இன்றியமையாமை குறித்துத் தெளிதல். செய்யுளை மெருகூட்டுவதில் அணிகள் பெறும் பங்கினை உணர்ந்து கொள்ளுதல். கட்டுரை வரைவதற்கான சொல்வளம், மொழி நடை, கருத்துச் செறிவு ஆகியவற்றினை உணருதல்.<br>4. தமிழ் இலக்கணத்தில் அகம், புறம், அகப்புறம் குறித்த வரையறைகளை அறிதல். படைப்பாளர்களை உருவாக்குதல். |

| | | |
|---|---|---|
| | CO4 | இலக்கிய வரலாறு<br>1. தற்கால இலக்கியங்களான புதுக்கவிதை, சிறுகதை தோன்றி வளர்ந்த பின்புலத்தையறிதல்.<br>2. தமிழ் இலக்கிய வரலாற்றில் சமயங்களின் பங்களிப்பினை அறிதல். உரைநடை இலக்கிய வரலாற்றில் வளர்ச்சியில் புதினத்தின் பங்களிப்பு பற்றித் தெரிந்துகொள்ளுதல்.<br>காப்பிய வகைகளை அறிதல்.<br>3. காப்பிய வளர்ச்சியில் சமணம் மற்றும் பௌத்த சமயங்களின் பங்களிப்பு பற்றித் தெரிந்துகொள்ளுதல். தமிழில் நாடகக் கலை வளர்ந்த வரலாற்றினைத் தெளிதல்.<br>4. சங்க இலக்கியத்தின் தோற்றம், வளர்ச்சி, உள்ளடக்கம் குறித்து அறிந்து கொள்ளுதல். பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் இடம்பெற்றுள்ள அறநெறிகளை உணர்தல். |
| | CO5 | பேச்சுக்கலையும் தன்முயற்சிப் படிப்பும்<br>1. மேடைப் பேச்சின் வகைகளை அறிதல், தமிழகத்தில் பேச்சுக்கலையின் வளர்ச்சியை அறிதல். சிறுகதை ஆசிரியர்களை அறிமுகப்படுத்துதல், கதை இலக்கியத்தின் நவீனப் போக்கை உணர்தல்.<br>2. பேச்சாளர்களுக்குரிய அடிப்படைத் தகுதிகளை வளர்த்துக் கொள்ளும் படிநிலைகளைப் பயிலுதல். புதிய ஆசிரியர்களின் அறிமுகம் மற்றும் படைப்பாளிகளின் நவீனப் போக்கை அறிதல்.<br>3. பல்லவ, பாண்டிய, சோழ, நாயக்க மன்னர்கள் வளர்த்த கோயிற்கலையின் மேன்மையினை உணர்தல். இன்றைய திரைத்துறை வளர்ச்சிக்கு நாடகக் கலையே வித்திட்டது என்பதை அறிந்து கொள்ளுதல்.<br>4. சிற்பக் கலை நுட்பத்தையும் மரபையும் அறிதல். தமிழரின் ஓவியத் திறனையும் ஓவியங்களின் வழி வரலாற்றையும் புரிதல். பண்டைய தமிழரின் மரபான தொழில்நுட்பத்தை உணர்தல். உரைநடை வாயிலாகக் கட்டுரை எழுதிப் பழகும் பயிற்சியை உருவாக்குதல். |

# PART IV - ADVANCED TAMIL
## COURSE OUTCOMES (CO)
## (பாடத்திட்ட விளைவுகளும் பயன்களும்)

| | | |
|---|---|---|
| K1<br>to | CO1 | செய்யுள் (இக்கால இலக்கியம் மற்றும் பக்தியிலக்கியம்)<br>1. இக்கால இலக்கியங்களின் தோற்றுவாயை அறிந்துகொண்டு தாமும் படைக்க முயலுதல். சமூக மாற்றங்களுக்கு ஏற்ப இலக்கிய வளர்ச்சியில் மாற்றம் ஏற்படுதலைப் புரிந்து கொள்ளுதல். வாழும் கவிஞர்களை அறிந்து கொள்ளுதல். பக்தியிலக்கிய நூல்கள் தமிழ்மொழிக்கு அளித்த பங்களிப்பினை அறிதல்.<br>2. காப்பிய இலக்கியத்தின் தோற்றுவாய் அறிதல். காப்பிய இலக்கியத்தின் வழி சமூக வாழ்வியலையும், சிறந்த அறநெறிகளையும் கற்றுத் தெளிதல். எட்டுத்தொகை நூல்கள் குறித்த அறிவைப் பெறுதல். தமிழர் வாழ்வியலை நிலத்திணைப் பகுப்பு அடிப்படையில் புரிதல். |
| | CO2 | இலக்கணமும் மொழித்திறனும்<br>1. தொடர்களில் வல்லினம் மிகுமிடம்/மிகா இடம் பயன்படுத்தும் முறையை அறிதல். அலுவலக நிலை/பொதுநிலை கடிதங்களைத் தமிழாக்கம் |

| | | |
|---|---|---|
| K5 | | செய்வதற்கான கலைச் சொல் அறிதல்.<br>2. யாப்பிலக்கணத்தின் இன்றியமையாமை குறித்துத் தெளிதல். செய்யுளை மெருகூட்டுவதில் அணிகள் பெறும் பங்கினை உணர்ந்து கொள்ளுதல். விண்ணப்பம் (அலுவலகம், பொது) எழுதுவதற்கான கட்டமைப்பினை அறிதல். படைப்பாளர்களை உருவாக்குதல். |
| | CO3 | இலக்கிய வரலாறு<br>1. தற்கால இலக்கியங்களான புதுக்கவிதை, சிறுகதை தோன்றி வளர்ந்த பின்புலத்தையறிதல். தமிழ் இலக்கிய வரலாற்றில் சமயங்களின் பங்களிப்பினை அறிதல்.<br>2. காப்பிய வகைகளை அறிதல். சங்க இலக்கியத்தின் தோற்றம், வளர்ச்சி, உள்ளடக்கம் குறித்து அறிந்து கொள்ளுதல். பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் இடம்பெற்றுள்ள அறநெறிகளை உணர்தல். |
| | CO4 | பேச்சுக்கலை<br>1. மேடைப் பேச்சின் வகைகளை அறிதல், தமிழகத்தில் பேச்சுக்கலையின் வளர்ச்சியை அறிதல்.<br>2. பல்லவ, பாண்டிய, சோழ, நாயக்க மன்னர்கள் வளர்த்த கோயிற்கலையின் மேன்மையினை உணர்தல். |
| | CO5 | தன்முயற்சிப் படிப்பு<br>1. சிறுகதை ஆசிரியர்களை அறிமுகப்படுத்துதல், கதை இலக்கியத்தின் நவீனப் போக்கை உணர்தல்.<br>2. உரைநடை வாயிலாகக் கட்டுரை எழுதிப் பழகும் பயிற்சியை உருவாக்குதல் |

# PART IV - BASIC TAMIL
## COURSE OUTCOMES (CO)
### (பாடத்திட்ட விளைவுகளும் பயன்களும்)

| | | |
|---|---|---|
| | CO1 | தமிழ் எழுத்துகள் அறிமுகம்<br>1. உயிர், மெய், உயிர்மெய் எழுத்துகளை அறிதல். அட்டவணை மூலம் உயிர்மெய் எழுத்துகளைக் கற்பித்தல். உச்சரிப்பு அறிதல். (குறில், நெடில்) (வல்லினம், மெல்லினம், இடையினம்).<br>2. செய்யுள் வடிவத்தை அறிதல். கவிதை வடிவில் நீதியறிதல். |
| | CO2 | சொல் அறிமுகம்<br>1. பெயர்ச் சொற்களின் வகைகளை அறிதல். வினைச் சொல்லின் வடிவம், பயன் பற்றி அறிதல்.<br>2. கதை வடிவம் அறிதல். கதை சொல்லப் பழகுதல். கதை சொல்லும் போது தேவையான மெய்ப்பாடுகளை அறிதல். |
| K1<br>to<br>K5 | CO3 | இருதிணை – ஐம்பால் – மூவிடம்<br>1. திணை வேறுபாடு அறிந்து சொற்களை அமைத்தல். பாலறிதல் தன்மை, முன்னிலை, படர்க்கைச் சொற்களைப் பயன்படுத்த வேண்டிய இடங்களை அறிதல்.<br>2. தொடரில் இடம்பெறும் மரபுச்சொல் அறிதல். அன்றாட வாழ்வில் இடம்பெறும் பழமொழிகளை அறிதல் மற்றும் பயன்படுத்துதல். கலைச்சொல் உருவாக்கம் அறிதல். |
| | CO4 | சொல்லாக்கம்<br>1. சொற்களஞ்சியம் பெருக்க உதவுதல். சொல்லின் பொருள் அறிதல். சொற்கள் இணையும் போதும் பிரிக்கும் போதும் தோன்றும் மாற்றங்களை |

| | | |
|---|---|---|
| | | அறிதல்.<br>2. கடித அமைப்பு முறையை அறிதல் (தொடக்கம், உடல்பகுதி, முடிவு). பொதுநிலை தனிநிலைக் கடிதங்களின் வேறுபாடு அறிதல். |
| | CO5 | தொடராக்கம்<br>1. ஒருமை, பன்மையினால் தோன்றும் பொருள் வேறுபாடு அறிதல். முக்காலமறிதல். எழுத்து வேறுபாட்டின் மூலமாகப் பொருள் வேறுபாடு அறிதல். எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் அறிதல்.<br>2. பாடுதலின் மூலம் நாப்பயற்சி பெறுதல். பாடல்களின் வகைகளை அறிதல். புதிய சொற்களை அறிதல். |